கேட்டல் கருத்தறிதல்

மொழியியல் வளரத் தொடங்கியபோது மொழியின் பேச்சுருவத்திற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கருத்து மேலோங்கிற்று. எழுத்துருவம் பெறாத மொழிகள் இருப்பினும் பேச்சுருவம் இல்லாத மொழிகள் இவ்வுலகில் இல்லை என்பதாலும், பேச்சுருவத்தின் அடிப்படையிலேயே எழுத்துரவம் அமைக்கப்படுகிறது என்பதாலும் பேச்சுருவத்திற்கே மொழியியல் அறிஞர்கள் முக்கியத்துவம் கொடுத்து அதை ஆழமாக ஆராய முற்பட்டனர்.

மனித சமூகம் மொழியைப் பயிற்சியின் அடிப்படையிலேயே கற்றுக்கொள்கிறது. பயிற்சி இல்லையேல் கல்வி இல்லை; பயிற்சி இல்லையேல் பயிற்சியின் அடிப்படையில் எழுகின்ற மொழிப்பழக்கமும் இல்லை. எப்படிக் கற்பிக்கிறோம் என்பது எவ்வளவு முக்கியமோ அதே போல எவற்றைக் கற்பிக்கிறோம் என்பதும் மிக முக்கியமானது. இன்று மொழி கற்பிப்பதும் கற்றுக் கொள்வதும் வாய்மொழிப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது.

முதலில் செவியும் நாவும் பயிற்சி பெறல் வேண்டும். அதாவது கேட்டலிலும் பேசுதலிலும் முதற்கண் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்; அதன் பின்னரே வாசித்தலும் எழுதுதலும். மொழித்திறன்களைக் கற்றுத்தருவதில் இயல்பான விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். நாம் பேசும் ஆற்றலைப் பெறும் முன்னர்க் கேட்டுணரும் திறனைப் பெறுகிறோம். ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் தாம் பேசுவதைவிடக் கேட்பதே அதிகம். எந்தச் சூழ்நி¨யிலும் கேட்டறியும் திறனே பேசும் திறனைவிட மிகுதியாகத் தேவைப்படுகிறது.

" செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என்னும் வள்ளுவர் வாக்கு கேட்டுணர்தலின் சிறப்பை – இன்றியமையாமையைத் தெற்றென விளக்குகிறது.

கேட்டுணர்தல் என்பதன் பொருள் பேசப்படுவதைப் புரிந்துகொள்வதாகும்.

மொழித்திறன்களை நாம் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

கேட்டுணரும் திறனும் வாசிக்கும் திறனும் கொள்திறன்கள் ஆகும். இந்தக் கொள்திறன்கள் விளைதிறன் அமைவதற்கு முன்பே அமைந்துவிடுகின்றன. மேலும் கொள்திறன் விளைத்திறனைவிட அதிகமாகவே இருந்துவரும். கொள்திறன்களில் நல்ல அடிப்படைகள் இடப்படுமானால் ஆக்கத்திறன்வலுவுடன் அமையும் என்பது உண்மை. அதாவது கேட்டலிலும் பேசுதலிலும் நல்ல அடிப்படை இடப்படுமானால், வாசித்தலும் எழுதுதலும் வலுவாக அமையும்.

பாடத்தை எப்படிக் கவரச்சிகரமாக அறிமுகப்படுத்துவது என்பதையும், மாணவர்களின் ஆர்வத்தைப் பாடத்தில் எவ்வாறு நீடித்து நிலைபெற்றிருக்கச் செய்வது என்பதையும், நான்கு மொழித்திறன்களையும் எவ்வாறு ஒருங்கிணைத்துக் கற்பிப்பது என்பதையும் ஆசிரியர் செவ்வனே அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். நான்கு மொழித்திறன்களும் (கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்) ஒன்றோடொன்று அணுக்கமான உறவு கொண்டவையாக இருப்பினும், ஒவ்வொரு மொழித்திறனையும் தனித்தனடியே கற்பிக்க முடியும் என்பதையும் ஆசிரியர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

கேட்குந்திறனை வளர்ப்பதற்குரிய சில பயிற்சிகள்

1. கேட்கும் திறன் மற்ற மொழித்திறன்களோடு (அதாவது பேசுதல், வாசித்தல், கேட்டல் ஆகியவற்றோடு) எத்தகைய தொடர்பு கொண்டுள்ள என்பதையும், கேட்டு உணரும் திறனை வளர்ப்பதற்கு

எம்மாதிரியான பயிற்சிகளைக் கொடுக்கலாம் என்பதையும், கொடுக்கப்படும் பயிற்சிகள் எவ்வாறாக வரிசைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும்.

2. ஆசிரியர் சில கட்டளைகளைக்கொடுத்து மாணவரை நிரைவேற்றி வைக்கச் செய்தல். (எ–டு) அனைவரும் வாசிப்பு நூலின் 22ஆம் பக்கத்தில் இரண்டாவது பத்தியைப் பார்த்து எழுதுங்கள்.

3. ஆசிரியர் அல்லது மற்றொரு மாணவர் கூறியவற்றைக் கவனமுடன் கேட்டு, பின்னர் கேட்ட கருத்தைத் திரும்பக் கூறச் செய்தல்.

4. லகர, ளகர, ழகர ஒலி வேறுபாடுகளையும், ரகர,றகர ஒலி வேறுபாடுகளையும், னகர,ணகர, நகர ஒலி வேறுபாடுகளையும் உணர்த்தவல்ல பயிற்சிகளைக் கொடுத்தல்

5. ஒரு கதையை அல்லது நிகழ்ச்சியை ஒலிப்பதிவு நாடாவின் வாயிலாகவோ, ஆசிரியர் அல்லது பிற மாணவர் வாயிலாகவோ மாணவர்களைக் கவனமுடன் கேட்கச்செய்து, வினாக்கள் மூலமாக அவர்களின் கேட்கும் திறனைக் கண்டறிதல்

6. கேட்டதை மனத்தில் பதிய வைக்குந்திறனை மாணவரிடையே வளர்ப்பதற்கு, முதலில் மாணவர்கள் பல தடவை செய்தியைக் கேட்டல் வேண்டும். உரையாடல்கள், உரக்க வாசித்தல், சொல்வதெழுதுதல், கேள்விகள் முதலியவற்றின் வாயிலாகவும் கேட்டல் திறனை வளர்க்கலாம்.

7. வானொலி நிகழ்ச்சிகள், குறிப்பாக மாணவர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், இலக்கியப் பேச்சுகள், சொற்பொழிவுகள் முதலியவற்றைக் கேட்கச்செய்து, அவற்றில் வினாக்கள் கேட்பதன்மூலமாக அவர்களின் கேட்டுணரும் திறனை வளர்க்கலாம்

8. பாடநூல்கள், சிறுகதைகள், புதினங்கள், வாரமாத வெளியீடுகள், செய்தித்தாள்கள் முதலியவற்றில் வரும் முக்கிய நிகழ்ச்சிகளை

ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து மாணவர்களுக்குப் போட்டுக் காட்டி, அவர்களின் கேட்டுணர்வுத்திறனை வளர்க்கலாம்.

9. மாணவர்கள் இதுவரையிலும் கற்றுள்ள மொழியமைப்புகளையும், பாடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியமைபுகளையும் ஒருசேரப் பயன்படுத்தி, ஓர் உரையாடலையோ ஒரு நிகழ்ச்சியையோ ஆசிரியர் உருவாக்கி, அதை ஒலிப்பதிவு நாடாவின் வாயிலாக மாணவர்களுக்குப் போட்டுக் காட்டி அவர்களின் கேட்டுணரும் திறனை வினாக்கள் மூலமாகக் கண்டறியலாம்.

10. ஒரு சொல் சொல்லப்பட்டதும் அதை அடுத்து என்ன சொல் சொல்லப்படும் என்பதையும், ஒரு வாக்கியளத்தைப் பாதிவரை சொன்னபின் அது எப்படி முடியப்போகிறது என்பதையும், ஒரு வாக்கியத்தைச் சொன்னதும் அடுத்த வாக்கியம் என்னவாக இருக்கும் என்பதையும் ஊகித்துணரவல்லத் திறன்களைக் கேட்டல் பயிற்சியின் வாயிலாக ஆசிரியர் மாணவரிடம் வளர்க்க வேண்டும்.

11. கேட்டுணரும் திறன் என்பது புரிந்துகொள்வது மட்டுமன்று; கேட்டவற்றுள் உள்ள சிக்கலைத் தீர்க்கச் சிந்திக்கத்தூண்டுவதும் கேட்கும் திறனாகும். இந்த அடிப்படையிலேயே ஆசிரியர் பயிற்சிகளை அளித்தல் வேண்டும்.

Mr Kalaimani

NIE 2003